# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018

| தரம் - 7 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

### பகுதி - I

- ❖ இவ்வினாத்தாளிற்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.
- ❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) ஆயிரக்கணக்கான பட்சிகள் அந்த ஆலமரத்தில் தங்கின. இங்கு பட்சிகள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1. உயிரினங்கள் 2. விலங்குகள் 3. மனிதர்கள் 4. பறவைகள்

02) பீழைக்கு இடங்கொடேல் என்பதில் பீழை என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1. துன்பம் 2. இன்பம் 3. கிலி 4. ஏழை

03) காந்தியடிகள் சிறைச்சாலை தனக்குத் சௌகரியமாக இருப்பதாகக் கூறினார். இங்கு சௌகரியம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1. சாதுர்யம் 2. அசௌகரியம் 3. சௌபாக்கியம் 4. சௌந்தர்யம்

04) வள்ளல் அடியிணைக்குச் வாய்த்த மலர் எதுவோ? என்பதில் வள்ளல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1. கொடையாளி 2. புரவலன் 2. உலோபி 4. ஏழை

05) DOWNLOAD (டவுன்லோட்) என்பதன் கலைச் சொல்

1. பதிவிறக்கம் 2. பதிவேற்றம் 3. மென்பொருள் 4. வலைத்தளம்

06) கணக்கன் - கணக்கச்சி போல ஊமையனுக்கு

1. ஊமை 2. ஊமத்தி 3. ஊமையி 4. ஊமைச்சி

07) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராய் வருவது

1. நீர்வீழ்ச்சி 2. முதலாளி 3. வந்தவன் 4. வானொலி

08) தங்கை பந்தை அடித்தாள் எனும் வாக்கியத்தில் செயப்படுபொருள்

1. தங்கை 2. அடி 3. பந்தை 4. அடித்தாள்

09) சூறாவளி வீசியது. பாரிய சேதங்கள் ஏற்பட்டன. இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பயன்படும் இணைப்பிடைச்சொல்

1. அதனால் 2. ஆனால் 3. ஆயினும் 4. எனினும்

kalvi அடியාපන

10) அறத்தான் வருவதே இன்பம் என்பது மூன்றாம் வேற்றுமை எப்பொருளில் வந்துள்ளது.

1. உடைமை 2. கருத்தா 3. உடன்நிகழ்ச்சி 4. கருவி

11) பின்வருவனவற்றுள் பலவின்பாலைக் குறிக்கும் சொல்

1. மாடு 2. மேசைகள் 3. வந்தது 4. மேசை

12) நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் முயற்சியுடன் செய்தால் வெற்றி கிடைக்கும் இதனை விளக்கும் பழமொழி

1. எறும்பூரக் கற்குழியும் 2. ஆனைக்கும் அடிசறுக்கும்

3. ஆழமறியாமல் காலைவிடாதே 4. சூடுகண்டபூனை அடுப்பங்கரை நாடாது

13) சிவபூசையில் கரடி புகுந்ததுபோல எனும் உவமைத்தொடரின் கருத்து

1. மறைவான நிலை 2. மனக்கலக்கம்

3. நன்மைக்கு இடையூறு 4. துன்பத்தில் அபயம்

14) வெண்ணிலாவே எனும் கவிதையின் ஆசிரியர்

1. கவிஞர் அழகசுந்தரதேசிகர் 2. எம். ஆதம்லெவ்வை

3. சோமசுந்தரப்புலவர் 4. கி.வா. ஜகந்நாதன்

15) உரம், சக்தி, வலிமை எனும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்

1. ஆற்றல் 2. பசளை 3. ஆரம்பம் 4. அழகு

16) பின்வருவனவற்றுள் இரட்டைமொழிச் சொல்லாக அமையாதது

1. மடமட 2. கடகட 3. கலகல 4. ஓடு ஓடு

17) போட்டுவாறன் - எனும் பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்காக மாற்றினால் வரும் சொல்

1. போட்டாறன் 2. போய்வாறன் 3. போய் வருகிறேன் 4. போட்டுவர்றன்

18) ஒரு விடயத்தை விளக்குவதற்கு முன் இடப்படும் நிறுத்தக் குறியீடு

1. முக்காற்புள்ளி 2. மெய்ப்பாட்டுக்குறி 3. காற்புள்ளி 4. அரைப்புள்ளி

19) யாழினி வாடிய கீரையை வேரோடு பிடுங்கினாள். இங்கு வினை அடைமொழிச்சொல்

1. பிடுங்கினாள் 2. வேரோடு 3. கீரை 4. வாடிய

20) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா

1. பொன்விழா 2. முத்துவிழா 3. வெள்ளிவிழா 4. வைரவிழா

($1\frac{1}{2}$ x 20 = 30புள்ளிகள்)

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1. ஒழுக்கம் உயர்வைத் தரும்
2. சுப்பிரமணிய பாரதியார்
3. வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்
4. வீழ்ந்த ஆலமரத்தின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

02) நோய்களற்ற ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கான துண்டுப்பிரசுரம் ஒன்றை 75 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. தொல்காப்பியர் குறிப்பிட்ட நானிலங்களும் எவை?
2. திருக்குறள் "உலகப் பொதுமறை" என ஏன் சிறப்பித்துக் கூறப்பட்டது?
3. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அச்சேற்றிய பழந்தமிழ் இலக்கியங்கள் 2 தருக.
4. "புத்தியில்லாதவன்" என்பது தரும் இருபொருள்களையும் எழுதுக?
5. விண்ணில் எவற்றுக்கிடையில் வெண்ணிலவு விளங்குவதாகக் கூறப்படுகிறது?

(2 x 5 = 10 புள்ளிகள்)

04) பின்வரும் பாடலைப்படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைப் பிளந்து கடலருகே
முட்டை வைத்தேன்
வைத்ததுமோ நாலுமுட்டை
பொரித்ததுவோ மூன்று
மூத்த குஞ்சுக்கு இரைதேடி
மூன்று மலை சுற்றிவந்தேன்
இளைய குஞ்சுக் கிரைதேடி
ஏழுமலை சுற்றிவந்தேன்
பாத்திருந்த குஞ்சுக்கிரைதேடி
பவளமலை சுற்றிவந்தேன்

1. ஆக்காண்டிக்குருவி எங்கே முட்டை வைத்தது?
2. மூத்த குஞ்சுக்கு இரைதேடி எத்தனை மலை சுற்றி வந்தது?
3. யாருக்கு இரைதேடி பவளமலை சுற்றி வந்தது?
4. ஒத்த கருத்துச் சொல் எழுதுக.
   கடல் - ....................................
   மலை - ....................................
5. 'எங்கெங்கே முட்டை வைத்தாய்' இங்கு வந்துள்ள எழுவாய்ச் சொல் எது?

(10 புள்ளிகள்)

05) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பதுளை மாவட்டத்தில் பசறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பலாங்கொடை எனும் பகுதியில் ஒருவாரமாகப் பெய்த அடைமழை காரணமாக மக்கள் பலர் கொல்லப்பட்டனர். அப் பிரதேசமக்கள் பெரும் சோகத்திற்கு ஆளாகினர். பலர் வீடு, வாசல், சொத்துக்கள் அனைத்தையும் இழந்தனர். சீரற்ற கால நிலையால் தற்போது மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இம்மக்களைப் பாதுகாப்பதற்காக இருப்பிடவசதிகளையும், உடைகளையும், மருந்துப் பொருட்களையும் அரசு வழங்கி அம் மக்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

1. எந்த மாட்டத்தில் ஒருவாரமாக அடைமழை பெய்தது?
2. மக்கள் எவ்வெவற்றை இழந்தனர்?
3. இதற்கு அரசு எத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டது?
4. ஒத்த கருத்துச் சொல் எழுதுக.
   i. வாரம்
   ii. வீடு
   iii. சோகம்
   iv. உணவு

(10 புள்ளிகள்)

06) அ) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.
   i. சரணாலயம்
   ii. கட்டுச்சோறு
   iii. சுற்றுப்புறச்சூழல்

(2 x 3 = 6 புள்ளிகள்)

ஆ) வழு நீக்கி எழுதுக.

கரையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொன்று முன்னேறி நாளுக்கு நாள் ஒளைச் சுவடியை நெருங்கிக்கொண்டிருக்கும்.

(4 புள்ளி)

கல்வி kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**